30th July 1962]

'Dear Mr. Speaker,

I would like to refer you to a report published in the Tamil Daily 'Dinathanthi' of this morning's (29th July 1962) issue of what I stated in the Assembly on the 28th about incidents in the Madras Penitentiary. I categorically stated in the Assembly on a previous day, referring to a false report in another Daily that the Police had not stepped into the prison at all. The Editor of that Daily being a member of the House promptly admitted the incorrectness of the report and expressed regret. I stated again yesterday that the Police had no part in dealing with the disturbances within the Jail and only the convict-warders and regular staff of the Jail had to deal with the situation. If you will permit me, I would like to raise this as a matter of privilege.'

After hearing the speeches of the Hon. Minister as well as the leaders of the two Opposition parties . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the portions marked in the newspaper may also be read out to the House.

MR. SPEAKER : Yes, I will read that portion also.

சென்னை ஜெயிலில், தி.மு.கழக மறியலில் கைது செய்யப்பட்டவர்களுக்கும், ஜெயில் வார்டர்களுக்கும் 'மோதல்' ஏற்பட்டதும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் போலீசார் தடியடி நடத்தியதும் தெரிந்ததே" என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது.

I find that there is a *prima facie* case. . . .

திரு. மீ. கலியாணசுந்தரம்: பத்திரிகையினுடைய தேதி என்ன ?

கனம் சபாநாயகர்: ஜூலை 29-ம் தேதி.

MR. SPEAKER : I find that there is a *prima facie* case of breach of privilege to be investigated by the Committee of Privileges. I suggest to the Hon. Minister to move a Motion.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the matter of privilege raised by me be referred to the Committee of Privileges.'

MR. SPEAKER : The question is—

'That the matter of privilege raised by the Hon. the Minister for Finance be referred to the Committee of Privileges.'

The motion was put and carried.

III. POINT OF INFORMATION *re* ALLEGED TORTURE IN MADRAS CENTRAL JAIL.

SRI M. KALYANASUNDARAM : Sir, with your permission . . .

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, ஜெயிலிலே நடந்தது பற்றி எனக்கு ஒரு தந்தி வந்திருக்கின்றது. போலீசார் சிறைக்குள்ளே போகவில்லை, ஆனால் அங்கே ஒரு சிறு லத்தி சார்ஜ் தகராறு நடந்தது. வார்டர்களும், கான்விக்டுகளும் கால் மணிநேரத்துக்குள் நிலைமையை சமாளித்தனர் என்று கனம் அமைச்சர் அவர்கள் அன்று அவர்களுடைய பிரசங்கத்திலே குறிப்பிட்டார்கள். எனக்கு வந்த தகவலிலே, தி.மு.க.-வின் முக்கிய தலைவர்களில் ஒருவராகிய திரு. என். வி. நடராஜனும், இந்தச் சபையின் அங்கத்தினராகிய திரு ராம. அரங்கண்ணல், எம்.எல்.ஏ., அவர்களிடமிருந்தும் சென்னையிலே இருந்து எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. அதிலே என்ன குறிப்பிட்டிருக்கின்றது என்றால்,

'Narasimhan and 200 others on 28th night released after difficult torture from Madras Central Jail with fresh lathi-charged wounds tonight, Sunday, 9 p.m.'

இது கனம் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட நகல் என்று நினைக்கிறேன். இந்தப் பிரச்சனை நிச்சயமாக நடந்திருக்குமா ? ஆனால் அதிலே எம்.எல்.ஏ . . . .

" also many others discharged after difficult torture with fresh lathi-charged wounds. One Loganathan of Teynampet admitted in Royapettah Hospital. Please take notice. Immediate action requested

கனம் நிதி அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தகவல் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரி சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. தொடர்ந்து ரத்தக் கறை படிந்த வண்ணமாக வெளியே வந்து கொண்டிருக்கின்றார்கள் என்று அவர்கள் சொல்லக்கூடிய காரணத்தினாலே சீப் பிரெசிடென்சி மாஜிஸ்டிரேட் அவர்களை நியமித்து ஒரு விசாரணை நடத்தி, அந்தத் தகவலை இந்தச் சபைக்கு தெரிவிப்பதற்கு இந்தச் சபையின் முதல்வர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*** கனம் திரு எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப்பற்றி பிரஸ்தாபித்ததை நான் வரவேற்கிறேன். நானே இவ் விஷயத்தைப் பிரஸ்தாபிக்க வேண்டுமென்று கருதினேன். நான் நினைத்துக் கொண்டிருந்ததை, கனம் அங்கத்தினர் அவர்களே பிரஸ்தாபித்து விட்டார்கள். தனக்கும் ஒரு தந்தி வந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். எனக்கும் அம்மாதிரி ஒரு தந்தி வந்தது ; இன்று காலைதான் அந்தத் தந்தியைப் பார்த்தேன். ஆனால், அதற்கு முன்னால் நேற்றிரவு 9½ மணிக்கு வீடு திரும்பியதும் தி.மு.க. தலைவர் திரு. என். வி. நடராசன் அவர்கள் அதற்கு முன்பு என்னிடம் பேசுவதற்காக போன் செய்ததாகக் கேள்விபட்டு, உடனே அவரைப் போனிலே கூப்பிட்டுக் கேட்டேன். திரு. நடராசன் அவர்கள், " 200 பேர்கள் இன்று இரவு 9 மணி, 10 மணிக்கு திடீரென்று விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்கள் அடிபட்டு இருக்கிறார்கள், அதனால் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள், அதே போல் நேற்றுக்கு முன்தினமும்

30th July 1962] [திரு. எம். பக்தவத்சலம்]

கூட 200 பேர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள், அவர்களும் அடிபட்டிருக்கின்றார்கள், அவர்கள் எல்லோரும் என்னிடம் வந்து சொன்னார்கள்", என்று தெரிவித்தார்கள். நான், "எதற்காக ராத்திரியிலே விடுதலை செய்யவேண்டும், அதுவும் ஞாயிற்றுக் கிழமையிலே விடுதலை செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரிய வில்லை, இப்போது இரவு பத்து மணியாகி விட்டது, மறு நாள் விசாரிக்கிறேன்", என்று சொன்னேன். அதற்குப் பிறகு, மதராஸ் ஜெயிலுக்குப் போன் பண்ணினேன். அப்போது சூபரின்டென் டென்டு இல்லை. ஜெயிலர் மட்டும் இருந்தார். அவரைக் கேட்டேன். அவர் சில விஷயங்களைச் சொன்னார். சூபரின்டென் டென்டை விசாரித்தபோதும், அதே விஷயங்களைத்தான் அவரும் சொன்னார். அதாவது, நேற்று முன்தினம் மன்னிப்பு கேட்டிருந் தார்கள். அந்த மன்னிப்பு கடிதங்களையெல்லாம் அரசாங்கத் திற்கு அனுப்பியிருந்தோம். மாலை ஐந்து மணிக்கு மேல் அரசாங் கத்திடமிருந்து 378 பேர்களை விடுதலைசெய்யும்படி உத்தரவு வந்தது. அவர்களை இனியும் வைத்திருக்கவேண்டாமென்று 378 பேர்களும் விடுதலை செய்தார்கள். அவர்களை ஒவ்வொரு வராக விடுவதற்கு இரவு 9 அல்லது 10 மணியாகி விட்டது. கடைசி நபர் போகும் வரை சூப்பரின்டென்டென்டு கூடவே இருந்ததாகச் சொன்னார். அதற்குப் பிறகு சிலர் மன்னிப்பு கடிதம் எழுதிக் கொடுத்ததால், அதை அரசாங்கத்திற்கும், போலீஸ் கமிஷனருக்கும் அனுப்பி உத்திரவு கோரப்பட்டிருக் கின்றது. அதன்படி 271 பேர்களை விடுதலை செய்யும்படியாக மாலை 4½ மணிக்கு உத்திரவு சென்றிருக்கின்றது. அப்போதும், சூபரின் டென்டு அவர்கள் அன்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்தாலும், மேலும் அவர்களைக் காவலில் வைத்துக் கொள்ளக்கூடாது என்று ஒவ்வொருவராக பரிசீலனை செய்து உடனே விடுதலை செய்திருக் கின்றார். அப்படிச் செய்வதற்கு இரவு 9½ அல்லது 10 மணியாகி விட்டது என்று சொன்னார்கள். அதற்குமேல் ஏன் அடித்தீர்கள் என்று கேட்டேன். அதற்கு ஜெயில் சூபரின்டென்டென்டு அவர்கள் சொன்னார்கள், 'முன்பு நடந்த பலாத்கார சம்பவத்திற்குப் பிறகு யாரையும் அடிக்கவில்லை' என்றும், கடைசி நபர் போகிற 10-00 a.m.
வரையில் கூடஇருந்து தானே அனுப்பியதாகவும், எவ்வித சம்பவ மும் நடைபெறவில்லை என்றும் சொன்னார்கள். மேலும், சென்ட்ரல் ஜெயிலிலே சென்ற 21-ம் தேதி நடந்த சம்பவத்திற்கு பிறகு எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றும் சொன்னார்கள். நான் இங்கே குறிப்பிட்டேனே அதற்கப்புறம் அடிக்கிற சம்பவம் கிடையாது. இருந்தாலும், 'கைதிகள் வாய்க்கு வந்தபடி திட்டி னார்கள், அவதூறாகப் பேசினார்கள், அவர்கள் நடக்கிற விதம் ரொம்பவும் பொறுக்க முடியாமல் இருக்கிறது, இருந்தாலும் பொறுத்துக்கொண்டுதான் இருக்கிறோம், அவர்கள் எவ்வளவோ செய்தார்கள்' என்று ஜெயில் அதிகாரிகள் கூறுகிறார்கள். இவ்வளவையும் பொறுத்துக்கொண்டிருக்கிறவர்கள் யார்? வார் டர்களும், கான்விக்ட் வார்டர்களும்தான். கான்விக்ட் வார்டர் களும் குற்றம் செய்தவர்கள் தான். ஆனால், அவர்கள் நீண்ட கால தண்டனையை அனுபவித்து பிறகு கான்விக்ட் வார்டாராக அமர்த்

தப்படுகிருர்கள். அவர்கள் குற்றம் செய்தவர்களாக இருந்தாலும் கூட, ரொம்ப அடக்கத்தோடு தான் இருந்தார்கள். இவ்வளவு நடந்தும்கூட பொறுத்துக்கொண்டு அடக்கத்தோடு தான் இருந் தார்கள். வேறு ஒன்றும் நடக்கவில்லை என்று சூபரின்டென் டென்டு அவர்களும், ஜெயிலர் அவர்களும் சொன்னுர்கள். இது தான் நிலைமை.

திரு மீ. கலியாணசுந்தரம்: (எழுந்தார்.)

MR. SPEAKER: No question should be asked on the Hon. Minister's statement.

திரு மீ. கலியாணசுந்தரம்: நான் 'கொஸ்டியன்' கேட்கவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் அரைகுறையாக விட்டுவிட்டால் அதிலிருந்து சந்தேகம் வரக்கூடாது. அதற்காகத்தான் கனம் அமைச்சரிடம் விளக்கம் கேட்கிறேன்.

MR. SPEAKER: I said that no question should be asked. This is a statement made by the Hon. Minister under Rule 82 and the rule says that no question shall be asked. It is just a clarification. Therefore, how can any question arise?

SRI M. KALYANASUNDARAM: The Hon. Speaker has got discretion and he has powers to permit anything. It is in his hands. With your permission, Sir, I think, I can ask for a clarification.

MR. SPEAKER: The Speaker cannot be coaxed.

SRI M. KALYANASUNDARAM: I am in the hands of the Speaker. It is only from that point of view I am saying. I am only making a representation to the Speaker that he may permit me to seek clarification.

நான் விஷயத்தை சொல்லிவிடுகிறேன். பின்னல் அதை அனுமதிக்கலாமா, அனுமதிக்கக்கூடாதா என்று நீங்கள் சொல் லுங்கள். அதன் படி நடக்கிறேன். கனம் மந்திரி அவர்கள் பதில் கூட சொல்ல வேண்டாம் என்ருல், சொல்லவேண்டாம்.

MR. SPEAKER: Yes, let me hear the hon. Member.

திரு மீ. கலியாணசுந்தரம்: சில பேர்கள் மன்னிப்பு கேட்ட தின் பேரில் விடுதலை செய்யப்பட்டதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். மன்னிப்பு கேட்கிற விஷயத்தைப்பற்றி என்ன சொல்லப்படுகிறது என்ருல் கட்டாயப்படுத்தி மன்னிப்பு கோரப் படுகிறது என்று சொல்லப்படுகிறது. அதோடு கனம் அமைச்சர் அவர்கள் கைதிகள் கலகம் செய்தார்கள், ஜெயில் அதிகாரிகள் பொறுத்துக்கொண்டு அடக்கமாக இருந்தார்கள் என்று சொன்னுர் கள். மன்னிப்புக் கேட்கும் மனேபாவம் கொண்டவர்கள் அப்படி நடந்துகொள்ளுவார்களா என்பதை . . .

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் அவர்கள் தந்தியை படித்தார்களே, அதிலே கட்டாயப்படுத்தி மன்னிப்புக் கோரிய தாக ஒன்றும் சொல்லப்படவில்லையே?

30th July 1962]

திரு. மீ. கலியாணசுந்தரம்: வெளியிலே அம்மாதிரி சொல்லப்படுகிறது. அவர்கள் பத்திரிகையிலும் அம்மாதிரி கண்டிருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் படித்த தந்தியில் மன்னிப்புக் கேட்டதைப்பற்றி ஒன்றுமே இல்லை. குற்றத்தைச் செய்து விட்டு மன்னிப்பு கேட்கிறவர்கள் எதை வேண்டுமானாலும் செய்வார்கள். ஆனால், அவர்களிடமிருந்து மன்னிப்பைக் கோரிப் பெறவேண்டுமென்ற அக்கறை அரசாங்கத்திற்கு ஒன்றும் இல்லை. குற்றம் செய்தவர்களை தண்டிக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. ஆனால், மன்னிப்பு கேட்டால், 'சரி, மன்னிப்பு கேட்கிறார்கள், அதற்குப் பிறகு அவர்களை என் ஜெயிலில் வைத்துக்கொள்ளவேண்டும்?' என்று தோன்றுகிறது. அவ்வளவுதான். ஆனால், அவர்களை அடித்து மன்னிப்புக் கேட்கச் செய்தார்கள் என்று சொல்லுவது மற்றொரு அபாண்டம். அதுமாதிரி ஒன்றும் நடக்கவில்லை என்பதைத் தான் நான் மீண்டும் சொல்லுகிறேன்.

IV.—CALLING ATTENTION TO THE STALEMATE IN MADRAS CORPORATION DUE TO DETENTION OF MAYOR AND DEPUTY MAYOR.

MR. SPEAKER: Sri M. Kalyanasundaram will call the attention of the Hon. Minister for Finance to a matter of urgent public importance, namely, the situation of stalemate and deadlock in the affairs of the Madras City Corporation due to the arrest and detention in custody of the Worshipful Mayor and Deputy Mayor.

திரு மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தவேண்டும், சபாநாயகர் அவர்களுடைய காரியாலயத்திலிருந்து. 41வது விதியின்படி நான் கொடுத்திருக்கக்கூடிய பிரச்னை சென்னை நகர கார்ப்பரேஷனில் ஏற்பட்டிருக்கக்கூடிய ஸ்தம்பித்துப்போன நிலைமை.

"Situation of stalemate arising out of the arrest and detention of his Worshipful Mayor and Deputy Mayor."

என்ற விஷயமாக நான் இந்த நோட்டீஸைக் கொடுத்திருக்கிறேன். அதோடு இன்னொரு அங்கத்தினர் அவர்களின் பெயரும் சேர்க்கப்பட்டு, நான் நோட்டீஸ் கொடுக்காத கல்வி சம்பந்தமான ஒரு விஷயமும் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இரண்டு அங்கத்தினர்கள் கொடுத்த நோடீஸ்களை சேர்ப்பதிலே தவறில்லை. இரண்டு அங்கத்தினர்கள் ஒரே பிரச்னையைப்பற்றி நோடீஸ் கொடுத்திருந்தாலும், அதற்குக் காரணம் வெவ்வேறாக இருக்கலாம்.

கனம் சபாநாயகர்: இரண்டும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட விஷயம்தான்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இன்று சட்டசபை கூடுவது கடைசி நாளாக இருப்பதால், அதுவும் ஒரு முக்கியமான பிரச்சனையாக இருப்பதால், அதைப்பற்றியும் சொல்லிவிடலாம் என்று தான் இரண்டும் சேர்க்கப்பட்டது. வேறு ஒன்றுமில்லை.